Friend



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 13 வியாழக்கிழமை (28-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 2

## யாழ். மாநகராட்சி மன்றம் உட்பட

# வடக்கில் உள்ளூராட்சி சபை தேர்தல்கள் குறித்து அறிவிப்பு!

## டிசம்பர் 11 முதல் 18 வரை நியமனப் பத்திரம் தாக்கல்

கொழும்பு, நவம்பர் 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் மற்றும் வவுனியா நகரசபை தவிர்ந்த வடமாகாணத்தில் உள்ள ஏனைய அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபை, 23 பிரதேச சபைகள், மூன்று நகர சபைகள் ஆகிய 27 அமைப்புகளுக்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்கள் குறித்தே அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தத் தேர்தல் தொடர்பான நியமனப்பத்திரங்கள் டிசம்பர் 11 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி நண்பகல் வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அமைந்துள்ள தேர்தல் பணிமனைகளில் வேட்பாளர்கள் தங்களது நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யலாம் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

சுயேச்சைக் குழுக்களிடம் இருந்து அடுத்த மாதம் 17ஆம் திகதி நண்பகல் வரை கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்படும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மாவீரர் தின நிகழ்வு

மட்டக்களப்பு, நவ. 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று சிறப்பாக நடந்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வாழை, தோரணங்கள், மஞ்சள் — சிவப்பு கொடிகள் எங்கும் கட்டப்பட்டிருந்தன.

இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியிலும் சில இடங்களில் மாவீரர் தினப் பதாகைகள் காணப்பட்டதாகத் தெரியவந்தது.

அரசடித்தீவில் மாவீரர் நினைவாலயம் ஒன்றை விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. துரை திறந்து வைத்தார்.

இதற்கிடையில் —

மட்டக்களப்பில் நேற்று ஏராளமான படையினர் குவிக்கப்பட்டு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர் என்றும் —

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி, மட்டக்களப்பு — கல்முனை வீதி ஆகியவற்றில் கூடுதல் படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர் என்றும் —

தீவிர சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. (சா. த.) பரீட்சை முடிவுகள் வெளியாகின

குருநகர், நவ. 28

கடந்த ஜூலை மாதம் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட — 1995 டிசம்பர் மாதத்திற்குரிய — விசேட ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சையின் முடிவுகள் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்துக்குக் கிடைத்தன.

இதனையடுத்து உரிய பாடசாலைகளுக்கு அவை அனுப்பி வைக்கப்பட்டன. நகரப் பாடசாலைகளுக்கு நேற்றுப் பிற்பகல் அவை கிடைத்தன.

முதற்கொண்டு கிடைத்த தகவல்களின்படி யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் கஜேந்திரன் பாலச்சந்திரன் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றிருந்தார்.

ஏனைய பாடசாலைகளில் அனேகமாக ஏழு பாடங்களில் அதிவிசேட திறமைச் சித்தி பெற்றதே சிறப்புப் பெறுபேறாக இருந்தது.

இப்பாடசாலைகளில் ஏழு அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கு; சங்கீதம் போன்ற பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சை இது

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுடன் பேச்சுக்கு இனி வாய்ப்பில்லை!

## புலிகள் தலைவர் பிரபா அறிவிப்பு

லண்டன், நவம்பர் 28

ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடத்துவதற்கு இனி வாய்ப்புக்கள் இல்லை என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அறிவித்திருக்கின்றார்.

மாவீரர் தினத்தை ஒட்டி நேற்று மாலை தாம் நிகழ்த்திய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

வன்னியில் மறைவிடம் ஒன்றிலிருந்து அவர் இந்த உரையை நிகழ்த்தியதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. தமது உரையில் பிரபாகரன் குறிப்பிட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

சமாதான முயற்சியில் ஸ்ரீலங்கா அரசு கொண்டுள்ள உறுதிப்பாட்டை நாங்கள் சந்தேகிக்கிறோம்.

தமிழர் தாயகத்திலிருந்து அரசுத் துருப்புகள் வெளியேறினால் மட்டுமே பேச்சு வார்த்தை நடத்த முடியும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப... பின்னை...... இனி வாக்குவேட்டை ஒருபக்கமும் தேடுதல் வேட்டை மறுபக்கமும் நடக்கும் என்று சொல்லுங்கோ......!

## மந்திகை ஆஸ்பத்திரியில் 2 இளைஞரின் சடலம்!

### படையினர் ஒப்படைப்பு

வடமராட்சி, நவ. 28

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இனந்தெரியாத இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டன.

புலோலி கிழக்குப் பகுதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம் பெற்றதாகக்கருதப்படும் தாக்குதல் சம்பவத்தில் மரணமான இரு இளைஞர்களின் சடலங்களே இவை என்று இப்பகுதியில் பேச்சடிபட்டது.

உடுப்பிட்டி மரணவிசாரணை அதிகாரி வி. நடராசா இவ்விரு இளைஞர்களின் மரணங்கள் குறித்தும் விசாரணை நடத்தினார்.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி. கதிரைவேற்பிள்ளை பிரேத பரிசோதனை நடத்தினார்

அடையாளம் காணப்படாத இந்தச் சடலங்களை அரச செலவில் அடக்கம் செய்ய உத்தரவிடப்பட்டது.

(உ-15-173)

## கொழும்பில் நேற்று வழமை நிலை பாதிப்பு

கொழும்பு, நவ. 28

மாவீரர் தினமான நேற்று கொழும்பு நகரில் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என பரவலாக அஞ்சப்பட்டதால் வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

பாடசாலைகளில் மாணவர் வரவு குறைந்திருந்தது. பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பப் பின் நின்றனர்.

கோட்டை நகரப் பகுதியில் வாகனங்களை நிறுத்த படையினர் அனுமதிக்கவில்லை.

கலகம் அடக்கும் படையினர் நகரில் எங்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கோட்டை ரயில் நிலையத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அநாமதேயப் பார்சல்கள் பற்றியும் எச்சரிக்கப்பட்டிருந்தது.

நகரில் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்ததுடன், வாகனங்களும் குறைவாகவே ஓடின.

(உ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமேல் ஓய்வு பெறுவோருக்கான கொடுப்பனவுகள் குறித்த விவரங்கள்

கொழும்பு, நவ. 28 இந்த வருடம் டிசம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் சேவையிலிருந்து ஓய்வு பெறும் அரசாங்க ஊழியர்களுக்கான இளைப்பாற்று விதிமுறைகள் குறித்து, பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு புதிய சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்தச் சுற்றறிக்கை குறித்து, உள்நாட்டு அலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அப்போது அவர் தெரிவித்த சில தகவல்கள் வருமாறு:-

★ இளைப்பாறும் ஊழியரின் சேவைக் காலம், சம்பள அளவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே ஓய்வூதியம் கணக்கிடப்படும். குறைந்த சம்பளத் தொகையைக் கொண்ட அரசாங்க ஊழியர்கள் 30 வருடங்கள் அல்லது அதற்கு மேல் சேவை ஆற்றியிருந்தால் இளைப்பாறும்போது கடைசியாகப் பெற்றுக்கொண்ட சம்பளத்தின் 90 சதவீதம் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்ட மாதாந்த ஓய்வூதியத் தொகையில் 24 மடங்குக்குச் சமமான திரட்டிய ஓய்வூதியத்தைப் பெறுவார்கள்.

— இத்தகைய ஊழியர் ஒருவர் ஓய்வுபெற்ற பின்னர் 10 வருட காலத்துக்கு அவர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் 85 சதவீதம் என்ற அடிப்படையில் மாதாந்த ஓய்வூதியம் பெறுவார். அதன் பின்னர் அவர் கடைசியாகப்பெற்ற சம்பளத்தின் 90 சதவீதம் என்ற அடிப்படையில் அவருக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.

★ அதிக சம்பளத் தொகை பெறும் அரசாங்க ஊழியர் ஒருவர், 30 வருடம் அல்லது அதற்கு மேல் சேவையாற்றியிருந்தால், அவர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் 85 சத வீதம் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்ட மாதாந்த ஓய்வூதியத்தின் 24 மடங்குக்குச் சமமான திரட்டிய ஓய்வூதியம் வழங்கப்படும். இத்தகைய ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்ற பின்னர் 10 வருட காலத்திற்கு அவர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் 75 சதவீதம் என்ற அடிப்படையில் மாதாந்த ஓய்வூதியம் பெறுவார். அதன் பின்னர் அவர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் 85 சத வீதம் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்ட மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.

— சேவைக்காலம் 30 வருடங்களுக்கு உட்பட்டதாக இருக்கும் பட்சத்தில், ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் ஒரு சத வீதம் என்ற அடிப்படையில் ஓய்வூதியத் தொகை குறைக்கப்படும்.

புதிய சுற்றறிக்கை பற்றிய விவரங்கள் கொண்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் சொன்னார். (அ-4)

---


## யா/இந்து மகளிர் கல்லூரி
### நிலையம் - 08

1995 ; 1 ஆம் வருட மாணவர்கள், 1994; 2 ஆம் வருட மாணவர்கள் முறையே எதிர் வரும் சனி, ஞாயிறு தினங்களில் பரீட்சை தொடர்பாக உடன் சந்திக்கவும்.

சிரேஷ்ட போதனாசிரியர்,
பட்டப்பின் கல்வி டிப்ளோமா.

(43820)



## பிற்போடப்பட்டுள்ளது

எதிர் வரும் **30-11-96** சனிக்கிழமை யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற இருந்த பரிசுத்த ஐக்கிய உபவாச ஜெபம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

பிராந்திய இணைப்பாளர்,
வைத்தியசாலை கிறிஸ்தவ ஐக்கியம்.

(43832)



## அஜந்தாஸ் ஸ்ரூடியோ
வதிரி, நெல்லியடி.

உங்கள் உடன் தேவை கருதி கறுப்பு வெள்ளை படங்கள் 1 மணித்தியாலத்தில் எடுத்துக்கொடுக்கப்படும்.

விசேட அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுக்க விரும்பும் பாடசாலைகள், நிறுவனங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**கவனிக்குக:**

பாடசாலைகளோ, நிறுவனங்களோ கறுப்பு வெள்ளைப் படங்களை மொத்தமாக எடுத்த மறுநாளே, சம்பந்தப்பட்டவரிடம் படங்கள் கையளிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

(One Day Service) கட்டணம் ரூபா **35.00** மட்டும்!

வெளிநாட்டுக்கான கலர் பாஸ்போர்ட் படங்களும்,
அந்தியேட்டிகளுக்கான பெரிய படங்களும்
செய்து கொடுக்கப்படும்.

(சி/3627)


**தெல்லிப்பழை**
**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
(வரையுள்ளது)

## சங்கபொதுச்சபைப்பிரதிநிதிகளுக்கு வருடாந்தப் பொதுக் கூட்ட அறிவித்தல்

**21—12—1996**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1996-12-21 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு (புதிய நேரம்) மல்லாகம் மகா வித்தியாலய மண்டபத்தில், நடைபெறவிருக்கின்றது என்பதனை சங்க பொதுச் சபை உறுப்பினர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

சங்க உப விதி 43 இன் பிரகாரம் மேற்படி வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏதாவது பிரேரணையைப் பிரேரிக்க விரும்பும் பொதுச் சபைப் பிரதிநிதிகள் அப்பிரேரணையின் பிரதியொன்றை 1996-12-07 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக எழுத்து மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் பிரேரணைகள் வருடாந்தப் பொதுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடம் பெறமாட்டாது என்பதனையும் தங்களுக்குத் தெவித்துக்கொள்கின்றேன்.

தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறாதவர்கள் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சி. முருகையா,
செயலாளர்,
தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்.

மல்லாகம்.
27-11-1996

குறிப்பு:- பொதுச் சபைப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ளுவதற்கு வசதியாக தங்களின் தற்போதைய முகவரியைச் சங்கத்தில் இதுவரை பதிவு செய்யாதவர்கள், எமது சங்கக் கிளை முகாமையாளர் மூலமோ அல்லது நேரடியாகவோ தங்கள் முகவரியைச் சங்கத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

(சி/3623)

---

வலிகாமம் கிழக்கு
பிரதேச சபை, நீர்வேலி.
**1997ஆம் ஆண்டுக்கான**
**கேள்வி அறிவித்தல்**

21 . 11 . 96 ஆம் திகதிய உதயன் 4 ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தின் 3ஆம் பந்தியில் —

போதிய காரணங்களுக்காக கேள்விகளை நிராகரிக்கவோ, இரத்துச் செய்யவோ செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு — என்றிருத்தல் வேண்டும்.

விசேட செயலாளருக்குப் [illegible] [illegible] றாகும்.

---

## கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பிரதி அதிபராக இருந்து, கல்லூரியின் சிற்பி அமரர் தெ. து. ஜெயரத்தினம் அவர்களுடன் தோளோடு தோள் நின்று, கல்லூரியினதும் மாணவர்களினதும் வளர்ச்சியையும் உயர்ச்சியையும் பெருநோக்காகக் கொண்டு உழைத்த மாமனிதர்

### அமரர் க. கிருஸ்ணபிள்ளை

அவர்களின் மரணச் செய்தி அறிந்து பெருந் துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவதோடு, அவர்தம் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
ஊழியர், பெற்றோர், பழைய மாணவர்.
**யா/மகாஜனக் கல்லூரி,**
**தெல்லிப்பழை.**

(சி/2624)

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை கிருஷ்ணபிள்ளை
[ B. A. (London), P. G. T. ]

(முன்னாள் உப அதிபர் - மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை, முன்னாள் அதிபர் - நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை, முன்னாள் அதிபர் - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், உடுவிலைப் புகுந்த இடமாகவும் கொண்ட க. கிருஷ்ணபிள்ளை அவர்கள் 22-11-96 அன்று சிலாபத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை தம்பதிகளின் அன்பு மகனும், உடுவில் காலஞ்சென்ற சீனிவாசகம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சுகிர்தமலரின் அன்புக் கணவரும், கிருஷ்ணானந்ததேவி (ஆஸ்திரேலியா), நிர்மலா (ஆஸ்திரேலியா), பாலஸ்கந்தன் (கனடா), கனகசபேசன் (ஆஸ்திரேலியா), கிருஷ்ணரஞ்சனி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தகப்பனாரும், பரமேஸ்வரன், சந்திரன், ஜெயமளா, பவளராணி, லோஜ்ராஜன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27 - 11 - 96 புதன்கிழமை சிலாபத்தில் நடைபெற்றன.

தகவல்:
செ. செல்லத்துரை

''கலையகம்'',
மானிப்பாய் வீதி, உடுவில். (9003)

### சுப்பிரமணியம் திருவள்ளுவர்

காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் திருவள்ளுவர் 28 - 10 - 1996 அன்று முள்ளியவளையில் காலமானார்.

அன்னார் அருளேஸ்வரியின் அன்புக் கணவரும், குமணன், செழியன், முத்துத்தாண்டவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரதேவர், மணிமேகலை, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28 - 10 - 1996 திங்கட்கிழமை அன்று முள்ளியவளையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
சி. த. பூபாலபிள்ளை
(மைத்துனர்)

33, கடையிற்சாமி வீதி,
நீராவியடி. (43822)

### கந்தையா கனகரட்ணம்
(நீர்வேலி பல. நோ. கூ. சங்க ஊழியர்)

நீர்வேலி பூதர்மடத்தடியைச் சேர்ந்த கந்தையா கனகரட்ணம் 25-11-96 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் கோப்பாய் மத்தி சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சுதன், சுபா (இத்தாலி), உமா, யசிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்லப்பா முத்தையா, அன்னமுத்து ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-11-96 வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சிவனேஸ்வரி
(மனைவி)

(9500)

### திருமதி அன்னம்மா சோமசுந்தரம்

காரைநகர், களபூமியைப்பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னம்மா சோமசுந்தரம் 25-11-96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற லலிதாம்பிகை மற்றும் தர்மராசா, துளசிமலர், கிருபமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினராசா (ஓய்வு பெற்ற தபாலதிபர்), துரைராசா, காலஞ்சென்ற கந்தையா மற்றும் தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மல்லாவியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சகோதரர்கள்

இல. 6/1 பேக்கரி லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/3625)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அச்சம் தரும் மண்ணாகத் திருமலை!

## இதற்கு அடித்தளமிட்டது சேருவில தொகுதியே

திருகோணமலையில் இடம் பெறும் சிங்களக்குடியேற்றங்கள் தொடர்பாக **"ஆக்கிரமிப்பாளர்கள் திருமலையில் போர்க்கொடி"** என்னும் தலைப்பில் கொழும்பிலிருந்து வெளிவரும் **"சரிநிகர்"** பத்திரிகையில் **"அருநிதாஸ்"** எழுதிய கண்ணோட்டம் மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.

தமிழ் பேசும் மக்களுடைய தாயக பூமியை ஆக்கிரமிக்கும் நோக்குடன் திட்டமிட்டு செயற்பட்டு வரும் சிங்கள இனவாத அரசியல் வாதிகளும் — அவர்களுடைய மேலாதிக்க ஆக்கிரமிப்புச் சக்திகளும்— கிழக்கில் அம்பாறையையும் திருமலையையும் சிங்கள ஆக்கிரமிப்பு விஸ்தரிப்பு வாதத்துக்கு உட்படுத்தி அங்குள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் வளங்களையும், நிலங்களையும், வாய்ப்புக்களையும் விழுங்கிவிட்ட சூழலில், இன்று திருமலை மாவட்டம் மேலாதிக்க ஆக்கிரமிப்பாளர்களின் தாயக பூமியென போர்க்கொடி தூக்கும் மண்ணாகி விட்டது.

திருத்தலமான திருக்கோணஸ்வரர்பூமி இன்று சிங்களஆக்கிரமிப்பாளர்களின் கூடாரமாயிற்று.

தென்னிலங்கை சிங்கள கரையோரக் கிராமங்களிலிருந்து அரச பிக்குகளின் ஆதரவுடன் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள் தமிழ் முஸ்லிம்களின் மாவட்டம் என்ற நிலையை மாற்றி சிங்கள பெரும்பான்மையினரைக் கொண்ட மாவட்டமாக ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது.

1920 ஆம் ஆண்டின் திருமலை மாவட்ட மொத்த மதிப்பீட்டில் 10 சதவீதத்துக்கும் குறைவாக இருந்த சிங்கள மக்கள் 1981 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி 33.4 சதவீதமாக உள்ளனர்.

உண்மையிலும் இத்தொகையானது சரியான மதிப்பீடல்ல. இதைவிடவும் கூடிய தொகையான சிங்களவர்களே இன்று இம்மாவட்டத்தில் வசிக்கின்றனர்.

1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு அறிக்கை வெளியானவுடன் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலி சிங்கள மக்கள் வாழும் ஒரு பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில், 'திருமலை மாவட்டம் இப்போது சிங்கள மக்கள் அதிகமாக வாழும் மாவட்டமாகி விட்டது. ஆனால் இதனை நாம் சொன்னால் தமிழர்கள் அஞ்சுவார்கள். ஆகவே நாம் சிங்கள மக்களின் தொகையைகுறைத்தே சொல்லியிருக்கிறோம்' என்று கூறிய கருத்து கவனிக்கத்தக்கது.

### குடியேற்றங்களுக்கு ஊக்குவிப்பு

இன்று அம்மாவட்டத்தில் 81 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி சிங்களவர்கள் 85 ஆயிரமாகவும், தமிழர்கள் 87 ஆயிரமாகவும், முஸ்லிம்கள் 75 ஆயிரமாகவும் (ஆயிரத்தில் கிட்டிய தொகை) வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

1950ஆம் ஆண்டுக்குப் பிறகு திட்டமிட்டு முடுக்கிவிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள், அரச நிலங்கள், கோயில் காணிகள், பள்ளிவாசல் நிலங்கள், தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமான தனியார் காணிகள் என்பவற்றிலேயே நடைபெற்று வருகின்றன.

விகிதாசார அடிப்படையில் கூட காணிகள் பகிர்ந்தளிக்கப்படாமல், யுத்த சூழலைக் காரணமாக வைத்து அரச படைகளின் ஆதரவுடன் அரசாங்கம் சிங்களக் குடியேற்றங்களை ஸ்தாபித்து வருகிறது.

தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் காணிகளை பலாத்காரமாக சுவீகரித்து சிங்களவர்களுக்கு வழங்குவதும், வங்கிக்கடன், தொழில் வாய்ப்பு, வசதிகளை அளித்து சிங்கள குடியேற்றவாசிகளுக்கு துப்பாக்கிகளும் அளித்து இக்குடியேற்றங்களை அரசு ஊக்குவித்தும் பாதுகாத்தும் வருகிறது.

இந்துக்களின் புனித தலமான திருக்கோணஸ்வரர் பூமியைச் சுற்றி 40 - க்கும் அதிகமான சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றி இருக்கிறது அரசு.

திருக்கோணஸ்வரர் ஆலயத்தையும் இராணுவம் ஆக்கிரமித்திருப்பதுடன் அங்கு மத வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் மட்டுப்படுத்தப்பட்ட உரிமையே அரசு வழங்கியிருக்கிறது.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஒரு மையவாடியை சிங்களவர்கள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள்.

'' லவ்லேன் '' போன்ற பிரதேச தமிழ் முஸ்லிம் மக்கள் அகதிகளாக்கப்பட்டு அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழலில் அம்மக்களின் கண்முன்னாலேயே அவர்களின் வாழ்விடங்கள் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன.

இதை எதிர்த்து இம்மக்கள் உயர் நீதிமன்றத்தில்வழக்குத் தொடர்ந்த போது உயர் நீதிமன்றம் இச்சிங்களவர்களை வெளியேறுமாறு பணித்தும் அரசும் அதன் இராணுவமும் உயர் நீதிமன்ற தீர்ப்பைஉதாசீனம் செய்து விட்டிருக்கின்றன.

### சிங்களவருக்கே சலுகைகள்

திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர்களாக மாத்திரம் இருப்பதானது மட்டுமே சகல அந்தஸ்துகளையும் பெற்றுத் தரும் என்ற நிலையே இருக்கிறது.

அரச அனைத்து உதவிகளும் பராமரிப்புகளும் சிங்களவர்களுக்கு மட்டுமே என்றாகி விட்டது.

திருமலை நகரத்தின் வியாபாரம் சிங்களவர்களின் கைக்கு மாறிவிட்டது. தமிழர்களும், முஸ்லிம்களும் வியாபார வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு படையினர் பெரும் தடையாகவிருக்கின்றனர்.

திருமலை மாவட்டம் சிங்கள விஸ்தரிப்பு வாதத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பூமியாயிற்று.

கிழக்கில் அம்பாறையையும், திருமலையையும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இழந்து விட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே இப்போது எஞ்சியிருக்கிறது.

அதுவும் மகாவலி போன்ற குடியேற்ற தந்திரோபாய நடவடிக்கைகளினால் விழுங்கப்படும் சூழல் உண்டு.

தற்போதைய விடுதலைப் புலிகளின் யுத்தத்தினால் ஓரளவு காப்பாற்றப்பட்டு இருக்கிறது. இருந்தும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 சதவீதத்துக்குள்ளான நிலங்கள் வெலிக்கந்தையூடாக அபகரிக்கப்பட்டே இருக்கின்றன.

இந்த அபாயகரமான ஆக்கிரமிப்புக்கெதிராக தமிழ்—முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து குரல் கொடுத்து, சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட வேண்டியிருக்கிறது.

தமிழ் முஸ்லிம் அரசியல் சக்திகள் இதற்கெதிராக ஒரு தீர்க்கமான போராட்டத்தை இதுவரை முன்னெடுக்கவில்லை.

இந்நிலை தொடர்பாக கூட்டணியும் முஸ்லிம் காங்கிரஸும் மௌனம் சாதித்தே வருகின்றன.

அங்கிருக்கும் ஓரிரு தமிழ்க் கட்சிகள் தவிர்க்கவியலாமல் இதற்கெதிராகக் குரல் கொடுத்த போது அச்சுறுத்தப்பட்டிருக்கின்றன.

இந்நிலையானது எமது தாயகபூமி தொடர்பான எதிர்கால நம்பிக்கையை சிதைத்து விட்டிருக்கிறது.

அண்மையில் நடந்த சம்பவங்கள் இச்சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்தும் சக்தி ஜனநாயக சூழலில் உள்ள அமைப்புக்கு முடியாத ஒன்றாகி விட்டதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

திருமலை கூட்டணி நாடாளுமன்ற பிரதிநிதி தங்கத்துரை இது தொடர்பாக காத்திரமான செயற்பாடுகளை இதுவரை மேற்கொள்ளவில்லை.

மண்ணைப் பாதுகாப்போம் என்பது வெறும் அரசியல் மேடைகளில் உணர்ச்சி தரும் தேர்தல் கோஷமாக மட்டுமே உள்ளது.

வரலாற்றில் கூட்டணி விட்ட தவறானது திருமலை பறிபோவதற்கான ஒரு அடிப்படைத் தவறாகி விட்டிருக்கிறது.

1922 இல் பொத்துவிலில் ஒரு தமிழர் பிரதிநிதித்துவத்தை பெறுவதற்காக மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியை மாற்றி சேருவில தொகுதியை சிங்களவர் பெறுவதற்கான ஆதரவை கூட்டணியினர் வழங்கினர்.

இவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கும் போதுதான் சேருவில தொகுதி ஏற்படுத்தப்பட்டது.

### சேருவில தொகுதி

சேருவில தொகுதியானது தெஹிவத்த கங்குவேலி, மேன்காமம், கொலனி 76 போன்ற பாரம்பரிய தமிழ்க் கிராமங்களை ஆக்கிரமித்தே உருவாக்கப்பட்டிருக்கிறது,

இத் தொகுதி உருவாக்கமானது தமிழர்களின் நீண்டகால அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதித்திருப்பதற்கும், திருமலையை இழப்பதற்குமான அதிக வாய்ப்பை தந்தது.

திருமலை மாவட்டம் 1983, 1985, 1990 ஆம் ஆண்டுகளில் இராணுவத்தின் ஆதரவுடன் சிங்கள மக்களின் ஆக்கிரமிப்புக்குள்ளாகி இருக்கிறது.

திருமலை தமிழ் மக்கள் மீதான படுகொலைகள், சொத்துக்கள் வீடுகள் அழிப்பு என பாரிய பொருளாதார இழப்புக்களை இம்மக்கள் சந்தித்து இருக்கின்றனர்.

பலஸ்தீன மண்ணை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமித்தது போன்ற ஆக்கிரமிப்பு திருமலைமாவட்டத்தில் நடந்திருக்கிறது.

இக்கலவரங்களுக்கும், ஆக்கிரமிப்புக்களுக்கும், காணி அதிகாரி பீரிஸும், அவர் சார்ந்த பௌத்த பிக்குகளும் காரணமாக இருந்திருக்கின்றனர்.

கோயில் காணிகளில் சிங்களவர்களை குடியேற்றுவதனை நியாயப்படுத்தி வந்தவர்தான் இந்தப் பீரிஸ். பீரிஸ் என்ற காணி அதிகாரி திருகோணமலை மாவட்டத்தில் வதியும் சிங்கள மக்களின் இரட்சகன், சிங்கள குடியேற்ற திட்ட விஸ்தரிப்பு வாதத்தின் ஒரு குறியீடு. பீரிஸ் அண்மையில் திருமலையில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டு இருக்கிறார்.

பீரிஸின் இழப்பானது அங்குள்ள சிங்களவர்களின் மனதில் ஒரு நாயகனை இழந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இச் சூழலில் பௌத்த பிக்குகள், சிங்கள முதலாளிகள், சிங்களக் காடையர்கள், அரச படைகள் அங்குள்ள மக்களை அச்சுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

திருமலை தங்களது பாரம்பரிய பூமி எனவும், தமிழர்கள் தங்களை வாழ விடுகிறார்கள் இல்லை எனவும் இப்போது போர்க்கொடி தூக்குகின்றனர்.

தங்களது குடியேற்றங்களுக்கும் ஆக்கிரமிப்பு அதிகாரத்துக்கும் தடையாகவுள்ள சக்திகளை திருமலையில் இருந்து துரத்தியடிக்கப் போவதாகவும் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

இதில் முன்னணியில் இருப்பவர்கள் பௌத்த பிக்குகளும் உள்ளூர்ச் சிங்கள அரசியல் வாதிகளுமே.

திருமலை இப்போதுதமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிர்காலம் தொடர்பாய் அச்சம் தரும் மண்ணாகிவிட்டது.

சிங்கள இனவாத அரசியல் வாதிகளும், பௌத்த பிக்குகளும் தங்களின் கடமையை ஒழுங்காகச் செய்கிறார்கள்.

எம் மக்கள் தொடர்பாய் எமது அரசியல் தலைமைகளும் எமது சக்திகளும் எப்போது தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்யப் போகிறார்களோ?

★

# ஊரடங்கு நேரம் சுகவீனமுற்ற பெண் நோயாளிக்கு ஏற்பட்ட கதி

## வாகனத்தில் வரும் வழியில் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 28

திடீர் சுகவீனமுற்ற பெண் நோயாளி ஒருவரைச் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு — ஊரடங்கு வேளையில் — எடுத்துச் செல்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அந்த நோயாளி இடைவழியில் காலமானார்.

இந்தச் சம்பவம் கடந்த 16 ஆம் திகதி மாலை நடைபெற்றிருக்கின்றது.

திடீர் சுகவீனமுற்ற தமது மனைவியை, ஊரடங்கு ஆரம்பித்த வேளை சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு அவசரமாகக் கொண்டுசெல்லத் தாம் எடுத்த முயற்சிகள் —

சாவகச்சேரி ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் வேறு தேவைக்கு பயன்படுத்தப்பட்டமை —

தனியார் வாகனத்தில் தனது மனைவியை ஊரடங்கு வேளையில் கொண்டுசெல்லத் தாம்பட்ட கஷ்டங்கள் —

இடைவழியில் ஓரிடத்தில் தொடர்ந்து செல்வதற்குச் சுமார் அரைமணி நேரம்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

# 800 தொன் சீனி கப்பலில் வருகிறது

யாழ்ப்பாணம், நவ. 28

குடாநாட்டில் சீனிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை யடுத்து அவசரமாக 800 மெற்றிக் தொன் சீனியை கொழும்பில் இருந்து எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் வடக்கு நோக்கிப் புறப்படும் அடுத்த கப்பலில் இந்த சீனியை அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக செயலகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

[இ-3]

# முதலமைச்சர் சிபார்சிலேயே ஆளுநர் நியமிக்கப்படுவார்

## தெரிவுக் குழுவில் இணக்கம்

கொழும்பு, நவ. 28

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் யோசனையில் பிராந்தியங்களின் ஆளுநர்களை பிராந்தியங்களின் முதலமைசர்களின் சிபார்சின் பேரிலேயே ஜனாதிபதி நியமிப்பது என்ற ஏற்பாட்டுக்கு நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கடந்த திங்கட்கிழமை இணக்கம் காணப்பட்டது.

முதலமைச்சர்களின் சிபார்சின் பேரிலேயே ஆளுநரை நியமிப்பது என்ற ஏற்பாட்டுக்கு தெரிவுக் குழுவின் ஐ. தே. க. உறுப்பினர்களும் இணக்கம் தெரிவித்தனர்.

(இ-3)

# முத்திரைக்கு தட்டுப்பாடு நீங்கியது

குடாநாட்டில் நிலவிய முத்திரைத் தட்டுப்பாடு நீங்கி உள்ளது.

கொழும்பில் இருந்து விமான மூலம் 38 பொதிகளில் முத்திரைகள் திங்கட்கிழமை எடுத்து வரப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் ஒன்றினால் மட்டும் தீர்வு கண்டு விட முடியாது!

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, நவ. 28

''இந்நாட்டில் எழுந்துள்ள இனப்பிரச்சினைக்கு யுத்தம் ஒன்றினால் மட்டும் தீர்வு காணமுடியாது''.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இவ்வாறு கூறியுள்ளார்.

நாரம்மலை நகரில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அவை பயன் அளிக்கவில்லை. இலங்கையின் தெற்குப் பகுதியில் அவ்வப்போது கிளம்பிய எதிர்ப்புக்களால் இந்த முயற்சிகள் கைகூடாமல் போயின.

இனப்பிரச்சினை காரணமாக இலங்கையின் பொருளாதாரம் இப்போது வலுவிழந்து வருகின்றது. கூடியளவு பணம் யுத்தச் செலவுகளுக்கு ஒதுக்கப்படுகின்றது.

ஒரு வருட யுத்தச் செலவினத்தைப் பயன்படுத்தி மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற பல திட்டங்களைச் செய்து முடிக்கலாம்.

இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் எதிர்காலத்தில் தொழிலை எதிர்பார்த்திருப்பர். தற்போதுள்ள நிலையில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து இனப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் நாட்டின் வேலையில்லாப் பிரச்சினையை எம்மால் தீர்க்க முடியாமல் போய்விடும்.

இந்நாட்டின் சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காணப்படல் வேண்டும். தீர்வுத்திட்டம் ஒன்றை நாம் முன்வைத்துள்ளோம். இத்திட்டம் மூலமே சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணமுடியும்.

யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதா? அல்லது அர்த்தமற்ற யுத்தத்தை முடிவுக்கு கொண்டு சமாதானத்துடன் வாழ்வதா? என்பதையிட்டு மக்கள் முடிவு செய்யவேண்டிய காலம் இது-

இந்த அரசு பதவியேற்ற பின்னர் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் அரசு பெருவெற்றி கண்டுள்ளது. எனினும் அரசியல் தீர்வு ஒன்றினாலேயே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணமுடியும் என்றார் அமைச்சர் பீரிஸ்.

(உ-3)

# தொடர்ந்து பெய்யும் மழையால் வெள்ளம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் பெரு மழையினால் வெள்ள அபாயம் ஏற்பட்டு வருகின்றது.

கந்தரோடை, உடுவில், சங்குவேலி, மாசியப்பிட்டி போன்ற இடங்களில் தாழ்ந்த இடங்களில் வாழும் மக்களுடைய வீடுகளை சுற்றி வெள்ளம் நிற்கிறது.

நூற்றுக்கணக்கான குடிசை வாசிகள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயரத் தொடங்கியுள்ளனர்.

வயல்கள், குளங்கள் கிணறுகள் யாவும் நிரம்பியுள்ளன.

மானிப்பாய், கட்டுடை, சங்குவேலி போன்ற இடங்களில் உள்ள தாழ்ந்த வயல் வெளிகளில் எல்லாம் நெற்பயிரை மூடி வெள்ளம் நிற்பதால் நெற்செய்கையும் பாதிப்படைந்துள்ளது.

மழையைத் தொடர்ந்து காற்றும் வீசுமானால் பலத்த சேதம் ஏற்படும் என அஞ்சப்படுகிறது. (இ-152)

## சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம் நவ. 28

யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலயத்தில் கடந்த 15 ஆண்டுகளாக ஆசிரியர் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. ப. கனகசிங்கத்தை கௌரவித்து இன்று வியாழன் காலை 9.30 மணிக்கு பிரஸ்தாப வித்தியாலயத்தில் சேவை நலன் பாராட்டு விழா நடைபெறுகிறது.

வித்தியாலய அதிபர் திரு. சி. தார்சீசியஸ் தலைமையில் விழா நடைபெறும்.

(இ-51)

## ஊரடங்கு...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காத்திருந்தபோது மனைவியின் உயிர் பிரிந்தமை —

ஆகியவற்றை விவரித்துச் சாவகச்சேரியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் உதயனுக்கு விளக்கமான கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார்.

இந்த ஆசிரியர் சரசாலையில் உள்ள ஒரு பாடசாலையில் கல்வி போதித்து வருகின்றார். (உ)


உ

## சைவ பரிபாலனசபை
யாழ்ப்பாணம்

### ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை

காலம்: **2-12-96 திங்கள்**
இடம்: **நாவலர் ஆச்சிரம மண்டபம்** (நீராவியடி)
நேரம்: **முற்பகல் 9 மணி**

"நாவலருக்கு நாம் செய்ய வேண்டியன"
என்னும் பொருள் பற்றி
**சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்**
அவர்கள் விரிவுரை நிகழ்த்துவார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(43821) சைவ பரிபாலனசபை.


## 31-ம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில் 19 — 12 — 1980



ஆண்டவன் அடியில் 29 — 10 — 1996

செல்வன்
**நவரத்தினம் கலைச்செல்வன்**
(யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம் க. பொ. த (சா. த) 1996-ம் வருட மாணவன்)

கலைச் செல்வா! கணப்பொழுதில் காலன் உனைக் கவர்ந்தானே! உமது அன்பு கொண்ட வார்த்தைகள் ஆற்றல் நிறைந்த சிந்தனைகள் என்றும் எம் மனதை விட்டு அகலாது.

அதிபர், ஆசிரியர்கள், ஆண்டு 11 மாணவர்கள்
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.
(43825)


## மோட்டார் வாகனத்தினை வாடகைக்கு விடுவதற்கான கூறுவிலை

யாழ். பல்கலைக்கழகத் தேவைக்கு நாளாந்த அடிப்படையில் மோட்டார் வாகனம் (கார்) வாடகைக்கு விடுவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. வாகனத்தை வாடகைக்கு விடுவதற்கு விரும்புவோர் தமது ஒரு நாளைக்கான கூறுவிலையினை (வாகன, சாரதிக் கூலி உட்பட) எதிர்வரும் 4-12-96 ஆம் திகதிக்கு முன்பதாக நிதியாளர், யாழ். பல்கலைக் கழகம் என்னும் முகவரிக்கு மேல் உறையில் இடது புறத்தில் UJ/ F/ 19/ 89 என எழுதப்பட்டு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

வாகனம் சாரதி உட்பட மொத்தம் 6 பேர் அமர்ந்து செல்லக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
(சி/3622)



யா / கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி
கோப்பாய்

## புதிய மாணவர் அனுமதி - 1997
**ஆண்டு 6 - 12 வரை**

1997 ஆம் ஆண்டுக்கான சகல வகுப்புகளுக்குமுரிய அனுமதிகள் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்களை 20 - 12 - 1996 இற்கு முன்னர் கல்லூரிக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

மாணவர்கள் அனுமதிக்கப்படும் தினம் 30 - 12 - 1996

அதிபர்

27 - 11 - 96 (43829)



## நியூ ஈசன் கல்வி நிலையம்
பலாலி வீதி, உரும்பிராய்.

**மாணவர்களினதும், பெற்றோர்களினதும்**
வேண்டுகோளுக்கிணங்க கோண்டாவிலில் (கே. கே. எஸ். வீதி) இயங்கி வரும் எம் கல்வி நிலையம்
**உரும்பிராயிலும் தனது சேவையை ஆற்றவுள்ளது**
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

### A/L 97, 98 வர்த்தக வகுப்புகள்

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| பொருளியல் | — | திரு. ராஜேஸ்வரன் |
| வணி. புள்ளிவிபரவியல் | — | திரு. தவசேகர் |
| அளவையியல் | — | திரு. சர்மா |

**ஆரம்பம்: 08 - 12 - 96**
(ஞாயிறு 7-00 a.m.)

(43827)



## யாழ்ப்பாண மாநகரசபை

### ஆரம்ப சுகாதார குடும்ப நல உதவியாளர்கள் (தொண்டர்கள்) பயிற்சி நெறிக்கு ஆட்சேர்த்தல்

யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதாரப்பிரிவினால் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயரிஸ்தானிகராலய அனுசரணையுடன், நடாத்தப்படவுள்ள மேற்படி பயிற்சி நெறிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) பயிற்சி நெறிக் காலம் : 03 மாதம்
(ஆ) கல்வித்தகைமை: க. பொ. த. (சா. த) (2 தடவைக்கு மேற்படாது) கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
(இ) வயது (விண்ணப்பமுடிவு திகதியில்) : 18—30 வரை
(ஈ) உயரம் : 145 செ. மீற்றருக்கு மேல்
(உ) பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்
(ஊ) மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரக்குடியிருப்பாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும்
(எ) கோரப்பட்ட விவரங்களை உள்ளடக்கி, சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவங்களை ''மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்'') என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
(ஏ) விண்ணப்ப முடிவு திகதி : 05-12-96
(ஐ) பயிற்சியின் போது, நாளொன்றுக்கு ரூபா 50/- படியாக வழங்கப்படும்
(ஒ) பயிற்சியின் பின்னர், சபையினால் வேலைவாய்ப்பு வழங்குவதற்கான உத்தரவாதம் எதுவும் அளிக்கப்படவில்லை.

மேலதிக விவரங்களை யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
1996-11-27. (சி/3621)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் [illegible] நூலகம்.

# 40 ஆயிரம் அரச ஊழியர் பாகிஸ்தானில் வேலை நீக்கம்

## செலவினங்களைக் குறைக்க நடவடிக்கை

இஸ்லாமபாத், நவ. 28

பாகிஸ்தானில் அரசாங்கச் செலவினங்களைக் குறைப்பதான ஒரு முயற்சியாக 40 ஆயிரம் அரச ஊழியர்களை அந்த நாட்டின் இடைக்கால அரசு வேலையிலிருந்து நீக்கியுள்ளது.

இவ்வாறு வேலையில் இருந்து நீக்கப்பட்டவர்கள் பெனாஸிர் பூட்டோவின் 3 ஆண்டு கால ஆட்சியின் போது வேலையில் சேர்க்கப்பட்ட இரண்டு லட்சம் பேர்களில் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க செலவினங்களை சுமார் ஆயிரம் கோடி ரூபாக்களால் குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என இடைக்கால அரசு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ அதிகார துர்ப்பிரயோகம், மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-10)

## போதைவஸ்து கடத்தல்காரர் என பர்மா மீது கிளின்ரன் கண்டனம்

பாங்கொக், நவம்பர் 28

''பர்மாவின் இராணுவ ஆட்சியாளர்கள் சட்டவிரோதமான முறையில் போதைவஸ்துக்களைக் கடத்துவதற்கு உடந்தையாக இருப்பதைக் கைவிட்டு ஜனநாயக அரசொன்றை அமைக்க வேண்டும்.''

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் பர்மிய ஆட்சியாளர்களை மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

பாங்கொக்கில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கிளின்ரன் ஹெரோயின் மற்றும் அபின் போன்ற போதைவஸ்துக்களை மிக அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடு பர்மா என வர்ணித்தார்.

திருமதி ஆங்காங் சூசி தலைமையில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட துணிச்சலான சீர்திருத்தங்களை அவர் புகழ்ந்து பேசினார். (இ–10)

## 5பேரின் தலைகள் துண்டிப்பு

ரியாத், நவ. 28

போதைப் பொருள் கடத்தல் குற்றத்துக்காக சவூதி அரேபியாவில் ஐந்து வெளிநாட்டவர்களின் தலைகள் கடந்த செவ்வாயன்று துண்டிக்கப்பட்டன. அவர்களில் இருவர் பெண்கள். நான்கு பேர் பாகிஸ்தானியர்கள். ஒருவர் நைஜீரிய நாட்டைச் சேர்ந்தவர். (இ-10)

## ஐ.நாவின் நிபந்தனைகளை ஏற்க தயார் என ஈராக் தூதர் அறிவிப்பு

நியூயோர்க், நவ. 28

உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக எண்ணெயை விற்பதற்கு வகைசெய்யும் உடன்படிக்கை ஒன்றை அமுல் செய்வதற்கு தடையாக இருந்த சகல ஐ. நா. நிபந்தனைகளையும் ஈராக் ஏற்றுக்கொண்டுள்ளது என அந்த நாட்டின்.ஐ. நா. தூதுவர் நிஷாரி ஹம்துன் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கை அமுலாக்கத்துக்கு பொறுப்பான ஐ. நா. செயலணிக்குத் தலைமை வகிக்கும் ஐ. நா. துணைச் செயலாளர் நாயகம் சின்மையா ஹேர்கோனைச் சந்தித்ததின் பின்னர் ஈராக் தூதுவர் செய்தியாளரிடம் இந்த விவரங்களைத் தெரிவித்தார். (இ-10)

## றுவாண்டா படுகொலைகளுக்கு பிரிட்டிஷ் ஆயுதங்கள் காரணமா?

லண்டன், நவ. 28

சர்வதேச அளவிலான ஆயுதத்தடைகளை மீறும் நிறுவனங்கள் மீது கண்காணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டும் என ''ஹியூமன்றைற் வாச்'' என்னும் மனித உரிமைகள் நிறுவனம் பிரிட்டிஷ் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

றுவாண்டாவில் 1994 இல் இடம்பெற்ற படுகொலைகளுக்கு பிரிட்டிஷ் நிறுவனம் வழங்கிய 55 இலட்சம் டொலர் மதிப்புடைய ஆயுதங்கள் காரணமாக இருந்தன என அண்மையில் வெளியான குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை பிரிட்டிஷ் அரசிடம் அந்த அமைப்பு முன்வைத்துள்ளது. (இ-10)

**உலக அரங்கில்**

# ராணுவத்தினர் மீதான குற்றச்சாட்டை அவர்களே விசாரணை செய்வதா?

## யாழ். சம்பவங்கள் குறித்து அரசுப் பத்திரிகை கேள்வி

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படுபவர்கள் இராணுவக் காவலிலிருந்து காணாமல் போகிறார்களென்றும், பல கற்பழிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்றும் குற்றஞ் சாட்டப்படுகிறது. யுத்த களங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதும், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதாகக் குற்றஞ் சாட்டப்படுவதும் வழமையாக நடைபெறும் விடயங்களாகும். பங்களாதேஷ் யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான பெண்கள் இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் முழு உலகையே உலுப்பின. பங்களாதேஷின் போராட்டத்தை நியாயப்படுத்துவதற்கு இந்தக் குற்றச்சாட்டுகள் ஒரு காரணியாகவும் முன்வைக்கப்பட்டன.

கடந்த 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பத்து வயது மாணவியொருத்தி படை வீரர்களால் கெடுக்கப்பட்டாரென்ற குற்றச்சாட்டை முன்வைத்து, சில பாடசாலைகளில் பகிஷ்கரிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஏற்கனவே கிருஷாந்தி குமாரசுவாமி, ரஜனி வேலாயுதபிள்ளை என்ற இருயுவதிகள் படையினரால் கெடுக்கப்பட்டு, கொல்லப்பட்டிருக்கிறார்களென்று குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. பத்து வயதுப் பாடசாலைச் சிறுமியின் விவகாரத்தில் அது அப்பட்டமான பொய்யென இராணுவத் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தைப் பொறுத்தவரை அரசியல் தேவைக்காக சிலர் இவ்வாறான பொய்ப் பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விடுகிறார்களென்று கூறப்படுகிறது.

அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளை மேற்கொண்டு வரும் இந்த நேரத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் இந்தக் குற்றச்சாட்டுகளை வெறும் வெற்றுவேட்டுகளாக எவரும் கருதிவிடக்கூடாது. கற்பழிக்கப்படும் எந்தப் பெண்ணும் ஒரு பாரிய சமூகப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கிறாளென்பதை நாம் உணர வேண்டும். தான் கெடுக்கப்பட்ட சங்கதியைத் துணிந்து உலகுக்குக் கூற எந்தப் பெண்ணும் முன்வரமாட்டாள். பெண்களின் பெற்றோர் கூட உண்மைகளை அப்படியே சொல்லத் தாங்கவே செய்வார்கள். ஆனால் கற்பழிப்புக் குற்றச்சாட்டுகள் மிகப் பயங்கரமான எதிர்விளைவுகளை ஏற்படுத்துமென்பதால் குற்றச்சாட்டுகள் குறித்து, போடி போக்கான விளக்கங்களை எவரும் அளிக்கக் கூடாது.

குற்றவாளிகளே நீதிபதிகளானால் உண்மைகள் உறங்கும். கிருஷாந்தியின் சடலத்தை மாடு மேய்க்கச் சென்ற பதின்மூன்று வயதுச் சிறுவன் காணவில்லையென்றால் அந்த விவகாரம் அப்படியே புதைகுழிக்குள் அமுக்கப்பட்டிருக்கும். இது குறித்து பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய ஜோசப் பரராஜசிங்கம் எம். பி.க்கு கிருஷாந்தி கைது செய்யப்படவில்லையென்று நியாயம் பதிலாகத் தரப்பட்டிருக்கும்.

கற்பழிப்பு குற்றச்சாட்டுக்களை தமது சொந்த அரசியல் போராட்டத் தேவைகளுக்காக அதீதப்படுத்திக் காட்டச் சிலசக்திகள் முயற்சியெடுக்கும் என்பதும் உண்மைதான். அதற்காக குற்றச்சாட்டுக்களை மூடி மறைத்து நியாயம் சொல்ல முனைந்தால், அது அப்பாவித் தமிழ் மக்களை மாற்று முனைக்குத் தள்ளிவிடும் என்பதை அதிகாரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். அரசியல் நோக்கின்றி வெறும் யுத்த நோக்கோடு கட்டியெழுப்பப்படும் இராணுவம், உலகில் எந்தப் பாகத்திலிருந்தாலும் அடாவடித்தன நடவடிக்கைகளில் ஈடுபடாதெனக் கூற முடியாது.

யாழ்ப்பாணத்தில் தெரிவிக்கப்படும் கற்பழிப்புக் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான நடவடிக்கைகள் மிகக் கவனமாகக் கையாளப்பட வேண்டும். குற்றஞ் சாட்டப்பட்டிருப்பது இராணுவத்தினரென்றால் இராணுவமே விசாரணை செய்வதில் அர்த்தமில்லை. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் இராணுவத்திற்கெதிராக துணிந்து சாட்சி சொல்ல முன்வர மாட்டார்கள். பாதிக்கப்படும் பெண்களும் கூட சமூக வரம்புகளைத் தாண்டி தமக்கிழைக்கபட்ட அநியாயங்களை வெளியில் கூற மாட்டார்கள். இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமலிருக்க வேண்டுமெனில் அரசாங்கம் தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும், நீதியான விசாரணைகளை நடத்திக் குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெறாமல் தடுக்க முடியும். பொய்க் குற்றச் சாட்டுகளைக் கூறித் தமிழ் மக்களுக்குப் பூச்சாண்டி காட்ட முனைவோரையும் தோற்கடிக்கவும் முடியும். ★

அரச சார்பு பத்திரிகையான **"தினகரன்"** **"நீதி நிலைநாட்டப்பட வேண்டும்"** என்ற தலைப்பில் 24 - 11 - 96 இல் முன் பக்கத்தில் வெளியிட்ட ஆசிரியர் தலையங்கம் மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.

# இராணுவப் பேச்சாளரின் தகவலுக்கு குமார் மறுப்பு!

கொழும்பு, நவ. 28

யாழ்ப்பாணத்தில் பத்து வயதுச்சிறுமி ஒருத்தி படைவீரர்களால் கெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் செய்தி தவறானதென கொழும்பில் இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் திஸ்ஸ ஜயதுங்க கூறியது முற்றிலும் பிழையென அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்ததாக அரச சார்புப்பத்திரிகையான ''தினகரன்'' தனது முன்பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறான சம்பவம் நடைபெறவில்லையென்று முதலில் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பின்னர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட சிறுமியின் தந்தையோடு தொடர்பு கொண்டு, கற்பழிப்பு இடம்பெற்றதாகக் கூறப்படும் முகாமில் உள்ள சகல படைவீரர்களையும் பார்வையிடச் சிறுமியையும் தந்தையையும் அனுமதித்ததாகத் தெரிவித்துள்ளார். இவ்வாறான சம்பவமொன்று நடைபெறவில்லையென்றால் அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டது ஏன்?— என்றும் குமார்பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவில்லையென்றால் — அச்சிறுமியும் தந்தையும் வாக்கு மூலம் கொடுக்குமளவுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறார்கள் என்றால் — ஏன் அந்தச் சிறுமியை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தியிருக்கமுடியாது?— என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

முழுப்பிரதேசமே இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கையில் இடம்பெறக்கூடிய விளைவுகளைக் கவனத்தில் கொண்டு இராணுவத்தினருக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பார்களா என்றும் கேள்வி எழுப்பினார்.

இந்தச் சிறுமிக்கு அருகே பஸ் ஆசனத்தில் அமர்ந்திருந்த பெண் சோதனைச் சாவடியில் இராணுவ வீரரிடம் செல்லுமாறு சிறுமியைக் கேட்டுக் கொண்டாரென்றும் தெரிவிக்கப்படுகிறது. யார் இந்தப் பெண்? இந்தப்பெண்ணிடம் இருந்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்வதற்காக அவரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டதா?— என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்தச் சிறுமியினதும், அந்தத் தகப்பனுடையதும் வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் யார்? பொலீஸாரா? இராணுவமா?

இராணுவம்தான் வாக்கு மூலத்தைப் பெற்றுக் கொண்டதென்றால் அவர்கள் தமக்குச் சார்பான வாக்கு மூலத்தைப் பெற்றுக் கொண்டனரா? விசாரணை நடத்துவதற்குப் பொலீஸாரை இராணுவத்தினர் அழைக்காதது ஏன்? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் பத்திரிகையாளர் சந்திப்பின் போது இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்ட விசாரணையாளர்கள் யார்?— என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார் — இப்படி அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

10 H. P, 8 H. P. டீசல் என்ஜின்களுக்கு சகல உதிரிப் பாகங்களும், பெற்றர் என் ஜினுக்குரிய உதிரிப்பாகங் கள், பிளேற் வெட்டும் கற் கள், அஸ்பெஸ்ரஸ் ருவைன், 15 U. F. கொன்டென்சர் ஆகியன விற்பனைக்கு உண்டு. ஸ்ரீராஜ், வட்டு கிழக்கு, சித்தன்கேணி (வட்டு இந்துக் கல்லூரி அருகாமை யில்). (43802)

தும்பளை லூர்து மாதா கோயிலடியில் விவசாயம் செய்யக்கூடிய நல்ல பய னுள்ள 3¾ பரப்புக்காணி விற் பனைக்குண்டு. தொடர்பு:- தவத்துரை செந்தில்மணி, லூர்து மாதா கோயிலடி, தும்பளை, பருத்தித்துறை. (43798)

### வாடகைக்கு

யாழ். பகுதியில் நிரந்தர வேலை பார்ப்பவர்களுக்கு மட்டும் அறைகள் வாடகைக் குண்டு. மாத வாடகை 300/- முற்பணம் தேவையில்லை. தொடர்பு: ஜெயந்தி ஸ்ரோர்ஸ், இல. 426, காங் கேசன்துறை வீதி, யாழ்ப் பாணம். (வண்ணை சிவன் சந்தி). (43814

### ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் ஆங் கிலம் எழுத, வாசிக்க, கதைக்க பயில்வதற்கு (10 வயதிற்கு மேற்பட்டவர் கள்)விக்னேஸ்வரன் ஆச்சாரி, மே/பா ஜெயநதி ஸ்ரோர்ஸ், இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் சந்தி). (43813)

### ஆங்கிலம் 1997

4 ஆம், 8ஆம் ஆண்டு10ஆம் வகுப்புகள் 02 - 12 - 96முதல் ஆரம்பமாகின்றன. பதிவு களை இன்று முதல் தினமும் 4.00மணிக்கு செய்துகொள்ள லாம். சகாதேவன், இல: 37 பிரப்பங்குளம் லேன், வண் ணார்பண்ணை. (43824)

### சிங்களம்

எழுத்து, சரளமான பேச் சுப் பயிற்சி முதல் O/Lவரை. புதிய பிரிவு ஆரம்பம் 03-12-96. பதிவுகளை இன்று முதல் தினமும் பிற்பகல் 4.00 மணிக்கு செய்து கொள்ளவும். சகாதேவன், இல. 37, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை. (43823)

### வாங்கப்படும்

புறோயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகக் கொள் வனவு செய்யப்படும் திருமகள் களஞ்சியம் 418, K. K. S, வீதி, வண்ணை சிவன் கோயி லடி, யாழ்ப்பாணம். (9006)

## டிச. 31 இற்கு முன்னர் பதிவு செய்க!

யாழ்ப்பாணம், நவ. 28 யாழ். மாவட்டத்தில் பாவிக்காத வாகனங்கள் தொடர்பான பதிவுகளை டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளுமாறு யாழ். செயலக மோட்டார் பதிவுத் திணைக்களம் அறி வித்துள்ளது.

இதற்குத் தேவையான படி வங்கள் செயலகத்தில் உள்ள தாகவும் —

அவற்றை நிரப்பி உரிய கட்டணத்துடன் ஒப்படைக் குமாறும் —

மேலும் கோரப்பட்டுள் ளது. [உ-3]

---

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 21 — 11 — 1912

மறைவு: 28 — 11 — 1984

### முத்துக்குமாரு இளையதம்பி நடராசா

(இறைப்பாறிய ஆசிரியர்)

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

184A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர். (9002)

---

## 60 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு: 02 — 10 — 1974

உதிர்வு: 30 — 09 — 1996

### செல்வி ரஜினி வேலாயுதபிள்ளை

எங்களுடைய பெருந்தவமே! பெருமை தரும் பொக்கிசமே! உந்தனுடைய நினைவலைகள் தாக்கு தடி எம்மனதை. பொங்கிவரும் கடலலைக்கும் போட லாமோ பெருமணையை. அணைபோட முடியுமோடி எங்கள் கண்ணில் ஓடிவரும் பேரலைக்கு. கொடுமை செய்பாவிகள் வந்தாரோ கூற்றாக. தீராது இத்துய ரம். புண்ணியவதி நீ பூத்தாயோ! விண்ணிலே தார கையாய் நாம் இங்கு பார்த்திருந்தோம் — கண்கள் பூத்திருந்தோம் — நீரோட....

பிரிவால் வாடும்:

தந்தை: ச. வேலாயுதபிள்ளை
தாய்: வே. திலகவதி
சகோதரர்.

உரும்பிராய் வடக்கு. (43801)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 06 — 1961

மறைவு: 28 — 10 — 1996

### செல்வி வேலாயுதம் நளினி

28 - 10 - 96 ஆம் திகதி கொழும்பில் அமரத்து வம் அடைந்த செய்தியை அறிந்து அனுதாபம் தெரி வித்துக் கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் 29 - 11 - 1996 வெள்ளிக் கிழமை தொல்புரத்தில் உள்ள எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உற வினர், நண்பர்கள், அனைவரையும் கேட்டுக்கொள் கிறோம்.

பிரிவால் துயருறும்:
ஆசையம்மா, மாமி,
[illegible] குடும்பத்தினர்.

வே. சிவ[illegible]
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். (8999)

---

# யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்

### பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 07 - 12 - 1996 சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு (புதிய நேரம்) பாடசாலை மண்டபத்தில் நடை பெறும். இக்கூட்டத்திற்குப் பழைய மாணவர் அனை வரையும் அன்புடன் அழைக்கிறோம்.

### இரங்கற் திருப்பலி

மறைந்த பழைய மாணவரின் ஆன்ம சாந்திக் காக 30 - 11 - 1996 சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு (புதிய நேரம்) கன்னியர்மட சிற்றாலயத் தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பழைய மாண வர் அனைவரும் இதில் பங்குபற்றுமாறு அழைக்கப் படுகின்றனர்.

திருமதி யூலியற் யேசுதாசன்
செயலாளர்

(சி/3620)

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 03 — 1936

மறைவு: 10 — 12 — 1995

### அமரர் M. S. கந்தையா

(பிரபல வர்த்தகர், கந்தா ஸ்ரோர், வரணி)

திதி:- 28 — 11 — 96

குருவின் பரம்பரையில் வந்திடுநற் குரிசில்
திருவார்ந் திலங்கு திறலோய் – மருவுசீர்க்
கந்தையா வேள் நின் கருணையினை
என்னென்பேன்
சிந்தை கலங்கிறதே சிறந்து.

இந்நாளில் உங்களை நினைவு கூரும்;

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்;-
க. ஜெயமோகன்
(மகன்)
குருக்கள் குடியிருப்பு, வரணி. (43780)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 14 — 08 — 1943

உதிர்வு: 28 — 11 — 1994

### அமரர் கதிர்காமு சின்னத்தம்பி

( சாந்தி வோச் உரிமையாளர் )

பாசமுள்ள எங்கள் அப்பாவே!
ஆண்டுகள் இரண்டு சென்றதைய்யா
உணர்விழந்து வாடுகின்றோம்.
பாசமுள்ள எங்கள் குடும்பத்தின் விளக்கே...!
பரிதவிக்க விட்டதென்ன?
உங்கள் நினைவினை மறப்பதில்லை
எங்சள் பூவுலக வாழ்வு முடியும் வரை
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மாமியார்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
உற்றார், உறவினர்கள்.

தகவல்:
திருமதி சி. தங்ககணி (மனைவி)
120/1, டச்சு வீதி,
சாவகச்சேரி. (43722)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பயன் தருமா?

உலக வங்கியின் அனுசரணையுடன் வருடாந்தம் நடைபெறும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் கடந்த வாரம் பாரிஸில் நடைபெற்றது. ஸ்ரீலங்கா அரசு கேட்ட நிதி உதவியை விட, சற்று அதிகமான தொகையை வழங்க அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பிரஸ்தாப கூட்டத்தில் வைத்து, சமாதான முயற்சிக்கும், பொருளாதார சீர்திருத்தத்துக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசு மீது அழுத்தம் போடப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வழமையாக, கடந்த சில வருடங்களாக, பாரிஸ் மாநாடுகளில் மனித உரிமைகளைப் பேணுவதில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்பது குறித்தே வலியுறுத்தப்படுவது உண்டு. ஆனால் இம்முறை ஒலித்தட்டு மாற்றப்பட்டுவிட்டது.

சமாதான முயற்சிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற அழுத்தம் உண்மையிலேயே உலக வங்கியின் உள்ளத்தில் இருந்து வந்ததா அல்லது வெறும் பேருக்கான வலியுறுத்தலா என்பது தெளிவாகத் தெரிய வேண்டும்.

நிதி உதவி வழங்குதலுக்கும் மனித உரிமைகளைப் பேணுவதற்கும் முடிச்சுப் போடப்பட்ட போதிலும், சம்பந்தப்பட்ட நாடுகள், ஸ்ரீலங்காவுக்கான நிதி உதவியை ஒருபோதும் குறைத்ததில்லை. அதனால்,சமாதான முயற்சி, பொருளாதாரச் சீர்திருத்தம் ஆகியவை குறித்து ஸ்ரீலங்கா அரசு மீது போடப்பட்ட புதிய அழுத்தம் நடைமுறையில் உருப்படியான பயனைத் தருமா என்பது சந்தேகத்துக்கு உரியதே.

முந்திய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் போலவே, சந்திரிகா அரசும் போரைத் தொடர்வதில் அக்கறை காட்டுகிறது. அதனால் சமாதானத்தை உருவாக்கும் சாத்தியம் வெகு தூரத்திலும் தென்படவில்லை. போருக்குப் பெரும் நிதி வளம் செலவாகுவதால் பொருளாதாரச் சீர்திருத்தம் இயலாத காரியமாகிவிட்டது.

இந்த உண்மைகளை, யதார்த்த நிலையை, உதவி வழங்கும் நாடுகள் அறிந்துகொள்ளாமல், புரிந்துகொள்ளாமல் இல்லை. உலக வங்கிக்கும் அதன் நாயகனான அமெரிக்காவுக்கும் இலங்கையில் நடக்கும் போரினால் பொருளாதாரம் சரிந்து வீழ்வதும், அதனைச் சீர்திருத்த முடியாமல் இருப்பதும் தெரியாத சங்கதிகள் அல்ல.

அதனால் —

ஸ்ரீலங்கா அரசைச் சமாதான வழியில் உடனடியாக மாற்றி நடக்க வைக்க விரும்பினால், அமெரிக்காவினாலும், உலக வங்கியினாலும் அது இயலாத காரியமல்ல.

சமாதானத்தை முதலில் உருவாக்குங்கள்; அதற்காகக் கடினமாகப் பாடுபடுங்கள்; நல்ல பெறுபேறுகளைப் பெறுங்கள்; அதன் பின்னர் நிதி உதவியை அங்கீகரிக்கிறோம் என்று உதவி வழங்கும் நாடுகள் மூலம் ஸ்ரீலங்கா அரசை வலியுறுத்தினால் இலகுவில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

அவ்வாறில்லை என்றால் உதவி வழங்கும் நாடுகளும், அமெரிக்க முகவரான உலக வங்கியும் தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளும் காரியத்திலேயே ஈடுபடுகின்றன எனலாம்.

# வவுனியா அகதிகள் விவகாரமும் தமிழ் எம்.பிக்களின் போக்கும்!

வவுனியாவில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகள் தொடர்பாக "தினமுரசு" வார இதழ் வெளியிட்ட விமர்சனம் இங்கு பிரசுரமாகின்றது.

'பட்ஜெட்' விவாதங்களில் அனல் பறந்து கொண்டிருக்கின்றது.

எதிர்க்கட்சியும், எதிர்க்கட்சி வரிசையில் அமைந்துள்ள தமிழ்க் கட்சிகளும் 'பட்ஜெட்'டை தும்பு பறக்க விமர்சித்துக் கொண்டிருக்கின்றன.

நாடாளுமன்ற விவாதங்களைத் தவறவிடாமல் பத்திரிகைகள் வாயிலாகப் படித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் படித்துப் பார்க்கும் போது ஓர் உண்மை பளிச்சென்று தெரியும்.

ஆளும் கட்சியைத் தவிர வேறு எவருமே பட்ஜெட்டை வரவேற்றுப் பேசவில்லை.

பட்ஜெட் மீதான வாக்கெடுப்புக்கள் நடைபெறும் போது காட்சி மாறுகிறது.

பட்ஜெட்டை தும்பு பறக்க விமர்சித்த தமிழ்க் கட்சிகள் ஆதரவாக வாக்களிக்கின்றன.

### குத்துக்கரணம்

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசசிங்கம் பட்ஜெட்டை கடுமையாகச் சாடினார். ''இது ஒரு கண்துடைப்பு பட்ஜெட்'' என்று ஆவேசமாகப் பேசியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது.

பட்ஜெட்டின் இரண்டாம் மதிப்பின் மீதான பிரேரணையை ஆதரித்து அதே துரைராசசிங்கம் வாக்களித்தும் இருக்கிறார்.

பட்ஜெட் ஒரு கண்துடைப்பென்றால் அவர் ஏன் ஆதரவாகக் கை தூக்கினார்?

ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பட்ஜெட்டை புள்ளிவிவரங்களோடு சாடுவதில் முன்னணி வகிக்கவில்லை. ஆனால், அரசாங்கத்தை ஒரு பிடி பிடித்தார்கள்.

இது என்ன நாடா? அல்லது சுடுகாடா? — என்று கேட்காத குறைதான். அதே நாடாளுமன்ற உறுப்பினர்கள் பட்ஜெட்டை ஆதரித்து வாக்களித்துள்ளார்கள்.

### அகதிகள் விடயம்

அதேபோல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வவுனியா அகதிகள் விடயம் தொடர்பாகவும் பேசியிருக்கிறார்கள்.

அப்பேச்சுக்களும் ஓர் அரசியல் விளையாட்டாகவே அரசாங்கத்தால் நோக்கப்படுகிறது.

அரசாங்கம் அவ்வாறு நினைப்பதற்கு தமிழ்க் கட்சிகளின் அணுகுமுறைகளும் ஒரு காரணம் தான்.

நாடாளுமன்றத்தில் வவுனியா பிரச்சினை தொடர்பாக ஒரு விவாதம் நடத்தக் கோரியது தமிழர் விடுதலைக் கூட்டணி.

நாடாளுமன்றத்தில் உள்ள ஏனைய தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அது தொடர்பாக கூட்டணி மூச்சு விடவில்லை.

தாமே தனியாக நின்று விவாதம் கோரினால் தான் அரசியல் ரீதியில் லாபம் என்பதுதான் கூட்டணியின் கணக்கு.

அதனால் விவாதம் நடத்தப்படுவது உறுதியாகு முன்னரே பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுக்கப்பட்டது. ''வவுனியா விவகாரம் தொடர்பாக தனியான விவாதம். நாடாளுமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கூட்டணி கோரிக்கை'' என்று ஒரு பத்திரிகையில் செய்தியும் வெளியானது.

வேடிக்கை என்னவென்றால் குறிப்பிட்ட தினத்தில் நாடாளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டமே நடக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆகியோரை மட்டும் சந்தித்து தமக்கு ஒரு விவாதம் நடத்த அனுமதி கோரினார்கள் கூட்டணியினர்.

அவர்களும் சம்மதம் தெரிவித்தனர். ஆனால் குறிப்பிட்ட தினத்தில் அதாவது 15-11-96இல்விவாதம்நடக்கவில்லை.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் அஷ்ரப்புக்கு நேரம் இல்லாதமையால் விவாதம் நடக்கவில்லை என்று கூறப்பட்டது.

### பதில் சொல்ல வேண்டியவர் யார்?

ஆனால் வவுனியா அகதிகள் விடயத்தில் பதில் சொல்ல வேண்டியவர் பிரதி பாதுகாப்பு அமைச்சரே தவிர, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் அல்லர்.

பாதுகாப்பு தொடர்பான விதிகளின் காரணமாகத்தான் வவுனியா வரும் அகதிகள் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளார்கள். புனர்வாழ்வு அமைச்சர் அதில் தலையிட முடியாது. எனவே புனர்வாழ்வு அமைச்சரை மட்டுமே வைத்து ஒரு விவாதம் நடத்துவதால் பயனில்லை. பிரச்சினை தீரப் போவதில்லை.

ஆனால் கூட்டணியினருக்குத் தேவை என்ன? ஒரு விவாதம் நடத்தினோம். காரசாரமாக உரையாற்றினோம் என்று பத்திரிகைகளில் செய்தி வெளியாவது மட்டுந்தான்.

அதனால் அமைச்சர் அஷ்ரப் முன்னிலையில் விவாதம் நடத்த ஒப்புக்கொண்டு விட்டனர்.

### ஆர்வம் எதில்?

தமிழ்க் கட்சிகள் மத்தியில், பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உள்ள ஈடுபாட்டை விட, குறிப்பிட்ட பிரச்சினைகளை 'நாம்தான் முதலில் பேசினோம்' என்று பத்திரிகைகள் மூலமாகப் பெயரெடுப்பதில்தான் பலத்த ஆர்வம் காணப்படுகிறது.

அரசாங்கமும் அதனை நன்குபுரிந்து வைத்து எப்படி வேண்டுமானாலும் 'கத்துவதற்கு' மட்டும் வாய்ப்புக் கொடுத்துவிட்டு, தனது காதுகளை மூடிக்கொள்கிறது.

### அரசின் நிலைப்பாடு

வன்னியில் இருந்து வரும் மக்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று அரசு கருதுமானால் வவுனியாவுக்கு வருமாறு அழைத்திருக்க வேண்டியதில்லை.

வன்னிப் பகுதியில் அவர்கள் இருக்கக் கூடியதாக அங்கு போதிய நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்திருக்கலாம்.

அரசாங்க அதிபர்கள் மூலமாக இடம் பெயர்ந்த மக்களுக்கான முகாம்களை வன்னியில் உருவாக்கியிருக்கலாம்.

அரசாங்கம் அதற்குத் தயாராக இல்லை.

புலிகளை மக்களிடம் இருந்து பிரித்தாக வேண்டும்.

புலிகளை விட்டு மக்கள் வெளியேறி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவதாகக் காட்டியாகவும் வேண்டும்.

இந்த இரண்டு தேவைகளுக்கும் பயன் பட்ட பின்னர் மக்கள் முகாம்களில் அடைக்கப்படுகின்றார்கள்.

தேவைகளும் நோக்கங்களும் யுத்தம் சார்ந்தவையாக இருப்பதால், யுத்தத்தின் வெற்றிக்கு பாதகம் என்று கருதப்படும் விடயங்களையும், விதி முறைகளையும் தளர்த்துவதற்கு அரசாங்கம் தயங்கவே செய்யும்.

எனவே —

வவுனியா முகாம்களின் கதவுகள் திறக்கப்பட்டு, அம்முகாம்களில் உள்ளோர் வெளியே சுதந்திரமாக நடமாடக் கூடியநிலை தோன்றுவது கேள்விக்குறிதான். ★

## பெங்களூரில் இந்தியப் புலிகள் அமைப்பு

சென்னை, நவ. 28

பெங்களூரில் நடந்த அழகுராணிப் போட்டிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு ''இந்திய புலிகள்'' என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இக்குண்டு வெடிப்புக்களால் பெருஞ்சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-3)

## வசதி குறைந்தவர்கள் புறக்கணிக்கப்படுவது ஏன்?

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் கிராம சேவையாளர்கள் வறுமைப்பட்ட பதினைந்து குடும்பங்களைத் தெரிவு செய்து கோழிக்குஞ்சு வழங்கினார்கள். ஆனால் சுன்னாகத்தில் உள்ள கிராம சேவையாளர் பிரிவொன்றில் குறிப்பிட்ட ஒரு பகுதியில் ஒரு குடும்பத்தையாவது சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் தெரிவு செய்யவில்லை.

மேற்குறிப்பிட்ட பகுதியில் வாழ்பவர்கள். மிகவும் கஷ்டப்பட்டவர்கள். கூலி வேலை செய்தால் தான் அவர்கள் வீட்டில் அடுப்பெரியும்; இல்லாவிட்டால் பட்டினிதான்.

அரச அதிகாரிகள் ஏன் இவ்வாறு பாரபட்சம் காட்டுகிறார்கள்? இவர்களுக்குக் கோழிக்குஞ்சு வழங்கினால் அவை செத்துப் போய்விடுமா, என்ன? வசதி குறைந்த மக்களுக்கு உதவினால் அதிகாரிகளுக்கு அரசு பதவி இறக்கம் கொடுத்துவிடுமோ?

வசதி குறைந்த மக்களை அரச அதிகாரிகள் புறக்கணிப்பதற்கு எப்போது முற்றுப் புள்ளி வைக்கப்படும்?

சுன்னாகம், பா. கிருபாநிதி

## மீளக்குடியமர்வு கொடுப்பனவு; இவர்கள் தகுதியற்றவர்களா?

இடம்பெயர்ந்தோருக்கான மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுகள் கூடிய விரைவில் வழங்கப்படுமென பரவலாகத் தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஆனால் இந்தக் கொடுப்பனவு பற்றிய விளக்கம் பொதுமக்களுக்கு நன்கு விளக்கப்படவில்லையென சிலர் கருதுகிறார்கள். இக்கொடுப்பனவுகளுக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் கூட சரியான விளக்கம் கொடுக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். ஆகவே அதிகாரிகள் நாளேடுகள் மூலம் இதற்குரிய சரியான விளக்கத்தை அளிக்க வேண்டி இதை எழுதுகிறேன்.

### வாசகர் திருமுகம்

இடம்பெயர்ந்தவர்கள் திரும்பவும் தங்கள் வதிவிடங்களுக்குச் சென்றுதான் இக்கொடுப்பனவுகளைப் பெற வேண்டுமென்று சில கிராம சேவையாளர்கள் கூறுகிறார்கள். இடம்பெயராதவர்கள் அநேகமாக யாருமே இருக்க முடியாது என்பது எனது கருத்து. சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்து தற்போது தற்காலிகமாக வசிப்பவர்கள் இக்கொடுப்பனவுகளைப் பெற உரித்துடையவர்களாக மாட்டார்களா?

உதாரணமாக, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், கீரிமலை, பலாலி, வசாவிளான், மயிலிட்டி போன்ற கிராமங்களிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து சுமார் பத்து வருடங்களாகின்றன. அன்று முதல் தொடர்ந்து இடம்பெயர்ந்துகொண்டே இருக்கின்றவர்கள் நாட்டு நிலைமையால் இடம்பெயர்ந்து தற்காலிகமாகத் தங்கி இருக்கும் இடங்களில் உள்ள மக்களை (உத்தியோகத்தர்களைக் கூட) இடம்பெயர்ந்து இடர்ப்படுபவர்களாக மதிப்பிட சம்பந்தப்பட்டவர்கள் மறுக்கிறார்கள். அவர்கள் தமது நிரந்தர வசிப்பிடங்களுக்குச் சென்ற பின்னர் தான் கொடுப்பனவுகளைப் பெறவேண்டும் என்கிறார்கள்.

இவர்கள் கூறுவது சரியா? சரியாயின் மேலே குறிப்பிட்ட இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பவர்களின் கதி என்ன?

ஒரு சில கிராம அலுவலர்கள் கூறுவதுபோல தத்தம் சொந்த இடங்களுக்குப் போக முடியாதவர்கள் தொடர்ந்தும் இடர்ப்படவேண்டுமா? இல்லையேல் நாளையோ மறுநாளோ சொந்த இடங்களுக்குச் சென்று வசிக்கச் செய்து கொடுப்பனவுகளை வழங்குவார்களா? இவை பல்லாயிரக் கணக்கான மக்களின் வேண்டுகோள் என்பதால் பொறுப்பான அதிகாரிகள் இதனைக் கருத்திற்கொண்டு தகவல்களையும் கொடுப்பனவுகளையும் வழங்க நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகின்றேன்.

இருபாலை. மு. அருளானந்தம்

## நாளை

**கார்த்திகை 14**
**வெள்ளிக்கிழமை**
திதி: சதுர்த்தி
பிற்பகல் 1.55 வரை.
நட்சத்திரம்: புனர்பூசம்
மாலை 5.47 வரை.
ராகுகாலம்: 10.44 – 12.14
[illegible]
([illegible] பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் தலையீட்டை கோருகிறது ஈ.என்.டி.எல்.எவ்!

கொழும்பு, நவ. 28

முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் இலங்கைப் படைகள் பிரவேசித்து அங்குள்ள தமிழ் மக்களை மேலும் துன்பத்துக்குள்ளாக்கிய பின்னர் இந்தியாவின் தலையீடு அவசியம் இல்லாது போய் விடும். ஆகவே அதற்கு முன்னர் — காலந் தாழ்த்தாது — இந்தியா உடனடியாக இலங்கைப் பிரச்சினையில் தலையிடவேண்டும்.

— இப்படிக் கோரியுள்ளார் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் (ஈ. என். டி. எல். எவ்வின்) தலைவர் ஞானசேகரன்.

''இந்து'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

1954 ஆம் ஆண்டில் இருந்து இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டு விட்டன.

தமிழ்மக்கள் நிம்மதியுடன் வாழ, இந்தியா தமிழீழத்தைக் காலம் தாழ்த்தாது அங்கீகரிக்க வேண்டும்.

வன்னி மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மரங்களுக்குக் கீழ் பெரும் கஷ்டங்களுடன் வாழ்கிறார்கள். அவர்களுக்கு உணவு இல்லை; மருந்து இல்லை.

இன்னல்படும் மக்களுக்காக இந்தியா அனுப்பிய அரிசி அவர்களைச் சென்றடையவில்லை. இராணுவ முகாம்களுக்கே அவை சென்றுள்ளன — என்றார்.

(உ-3-150)

## இன்றும் மழை?

கொழும்பு, நவ. 28

நாட்டில் இடியுடன் கூடிய மழை இன்று முழுவதும் பெய்யும்; கடல் கொந்தளிப்பாக இருக்கும்; பலத்த காற்று வீசும்; மேகம் முகில் மூட்டத்துடன் காணப்படும்.

— இவ்வாறு வளிமண்டலத் திணைக்களம் நேற்று அறிவித்தது. (உ-ரி)

## ஜி. சீ. ஈ. ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரை நடைபெறாததால் எட்டாவது பாடத்துக்குரிய பெறுபேறு கிடைக்கவில்லை.

நேற்று மாலையில் கிடைத்த தகவல்களின்படி நகரப் பாடசாலைகள் சிலவற்றில் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

★ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி:- ஏழு பாடங்களில் 5 பேர், ஆறு பாடங்களில் 5 பேர்.

★ சென். ஜோன்ஸ் கல்லூரி:- எட்டுப் பாடங்களில் ஒருவர், ஏழு பாடங்களில் அதிவிசேட சித்தியும் இரண்டு பாடங்களில் விசேட சித்தியும் பெற்றோர் பத்துப்பேர், ஆறு பாடங்களில் அதிவிசேட சித்தியும் இரண்டு பாடங்களில் விசேட சித்தியும் பெற்றோர் 9 பேர்.

★ கனகரத்தினம் ம. ம. வி:- ஏழு பாடங்களில் ஒருவர்.

★ யாழ். இந்துக் கல்லூரி: ஏழு பாடங்களில் ஆறு பேர், ஆறு பாடங்களில் 29 பேர், ஐந்து பாடங்களில் 26 பேர்.

இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள், பரீட்சை முடிவுகள் வெளிவராத நிலையில், எதிர்வரும் 1ம் ஆம் திகதி ஆரம்பமாகும் இவ்வருடத்துக்குரிய ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றுவதா, இல்லையா என்று தெரியாமல் 'திரிசங்கு' நிலையில் நேற்று வரை காணப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3-51)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 28

பட்டப் பின்படிப்பு கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை, நாளை மறுதினம் சனிக்கிழமை தேசிய கல்வி நிறுவக யாழ். இந்து மகளிர் நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## மட்டக்களப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொரு செய்தி நிறுவனம் தெரிவித்தது.

மாவீரர் தினமான நேற்று வடக்கு மாகாணத்திலும் பெரிய சம்பவங்கள் ஏதும் நிகழ்ந்ததாக நேற்று மாலை வரை தெரிய வரவில்லை.

வலிகாமம் மேற்கு, தென்மேற்குப் பகுதிகளில் அசாதாரண அமைதி நிலவியதாகவும் —

பொது இடங்களில் மக்கள் நடமாட்டம் பெரிதும் குறைந்து காணப்பட்டதாகவும் —

அங்கிருந்து நேற்று மாலைக்கு முன்பதாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மாவீரர் தினம் முன்னைய வருடங்கள் போலல்லாமல் இம்முறை தாக்குதல்கள் ஏதுமின்றி வெறும் வைபவரீதியான நிகழ்வுகளுடன் முடிவுற்றதாகும் —

படையினர் அதி உச்ச உசார் நிலையில் இருந்ததே தாக்குதல்கள் இடம்பெறாமைக்குக் காரணம் என்றும் —

'வெரித்தாஸ்' வானொலியின் சிங்கள சேவை அறிவித்தது. (உ-3-10-150)

## தென் ஆபிரிக்கா 339 ஓட்டங்கள்

கல்கத்தா, நவ. 28

இந்தியாவுக்கும் தென் ஆபிரிக்காவுக்கும் இடையில் கல்கத்தாவில் நடக்கும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் ஆரம்ப நாளான நேற்று ஆட்டநேர முடிவின்போது தென் ஆபிரிக்கா 2 விக்கெட் இழப்பிற்கு 339 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (உ-10)

## வடக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏழு வாரங்கள் முடிவதற்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பது சட்டமாகும்.

யாழ். மாநகரசபைக்கான தேர்தல் பரபரப்பை ஏற்படுத்துவதாக இருக்கும் என்று தேர்தல் ஆணையாளர் கருத்து வெளியிட்டார் என செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டது.

வடக்கு - கிழக்குக்கு அப்பால், அமைதி நிலவும் தென்னிலங்கைப் பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தாமல் மூன்று தடவைகள் அறிவிப்பு மூலம் அதனை ஒத்திவைத்திருக்கும் அரசு —

பதற்றமான சூழ்நிலையில் உள்ள யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தப்போவதாகத் திடீரென அறிவிப்புச் செய்திருக்கின்றது என அச்செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியது.

(உ-ரி)

## அரசுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு வார்த்தைக்கு முன்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைப் போட்டு விடவேண்டும் என்ற நிபந்தனை உட்பட கேலிக் கூத்தான நிபந்தனைகளுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புலிப்படையினருக்கு சமாதானச் சமிக்ஞைகளை அனுப்புகிறார். இத்தகைய நிபந்தனைகளை நாம் ஒரு போதும் ஏற்கமாட்டோம்.

ஆத்ம கௌரவமுடைய — தன்மானமுள்ள — எந்தவொரு அமைப்பும் இப்படிப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள மாட்டாது. ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையை நடத்தி வருகின்றது.

இராணுவ ஆக்கிரமிப்பு நெருக்கடி இல்லாத நிலையில் மட்டுமே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்த முடியும்.

போர் உத்தியாக — தந்திரோபாயமாக — சில பகுதிகளில் இருந்து நாம் வெளியேறியதால் நமது கட்டுப்பாட்டில் இருந்த சில பகுதிகளை இழந்து விட்டோம் என்பதை ஒப்புக் கொள்கின்றேன்.

ஆனால் இது ஒரு தற்காலிக பின்னடைவேயென கொள்ளப்பட வேண்டுமே ஒழிய இராணுவத் தோல்வி என எடுத்துக் கொள்ளப் படக் கூடாது.

விரும்பிய இடத்தில் — விரும்பிய நேரத்தில் — எதிர்த் தாக்குதல்களை மேற்கொள்ளும் வல்லமை புலிகளுக்கு உண்டு — என்றார். (உ-3-10)

# அறிவித்தல்

பூதராயர் கோயில் ஒழுங்கை, பருத்தித்துறையைச் சேர்ந்த வினாசித்தம்பி இராமச்சந்திரன் (சோதி) ஆகிய நான், கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் கோயில் தொடர்பாக எனக்கு இருந்த சகல அதிகாரங்களையும் 1996 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 1 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு சபாநாயகம் ரவீந்திரன் அவர்கள் முகதாவில் 636 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய தரணி அதிகாரம் மூலம் விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறையைச் சேர்ந்த ஏரம்பமூர்த்தி சந்திரமூர்த்தி பெண் புவனேஸ்வரி அவர்களிடம் கையளித்து விட்டேன் என்றும், இனிமேல் குறித்த கோயில் விடயமாக எவரும் அவருடனேயே தொடர்பு கொள்ளுமாறு இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகிறேன்.

வி. இராமச்சந்திரன்
(சோதி)

(சி/3628)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால்) யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28 - 11 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கிருஷாந்தி வழக்கு கொழும்புக்கு மாற்றம்

## குற்றப் பத்திரிகை நேற்றுத் தாக்கல்

யாழ்ப்பாணம், நவ. 28

சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி, அவரது தாயார், தம்பி, அயலவர் ஆகியோரின் கொலைகள் தொடர்பான வழக்கைக் கொழும்புக்கு மாற்றுமாறு அரசுத் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையை யாழ். மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

இந்த வழக்கு நேற்று யாழ் மாவட்ட நீதிவானும் நீதிபதியுமான திரு. என். இராமச்சந்திரன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள 11 படையினர் மற்றும் பொலீஸார் ஆஜர் செய்யப்பட்டனர்.

கொழும்பில் இருந்து இந்த வழக்கிற்காக யாழ். வந்திருந்த அரச சட்டத்தரணி திருமதி பிரசாந்தி மகிந்தரத்ன சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்தார்.

அவர்கள் மீது கொலைக் குற்றச்சாட்டும், ஆள்கடத்தல் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளன; கற்பழிப்பு தொடர்பான குற்றச்சாட்டு ஏதும் சுமத்தப்படவில்லை.

கொழும்பு பிரதமநீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கை பாரப்படுத்துமாறு அரச சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை யாழ். மாவட்ட நீதிவான் ஏற்று மாளிகாவத்தையில் உள்ள முதலாம் பிரதம நீதிவான் நீதிமன்றத்துக்கு வழக்கைப் பாரப்படுத்தினார்.

எதிர்வரும் 2 ஆம் திகதி இந்த வழக்கு அங்கு விசாரணைக்கு எடுக்கப்படவிருக்கிறது.

அரச சட்டத்தரணி இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களையும் எடுத்துக் கொண்டு நேற்றே கொழும்பு திரும்பினார்.

அதற்கு முன்னர் —

கிருஷாந்தி மற்றும் மூவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் இடத்தை அரச சட்டத்தரணி பொலீஸாருடன் சென்று பார்வையிட்டதாக அறிய வந்தது. (உ-3)

காயமடையும் படையினருக்காக

# 100 எம். பிக்கள் இரத்த தானம்!

கொழும்பு, நவ. 28

யுத்தத்தில் காயமடையும் படையினருக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலா ஒரு பைந்த் இரத்தம் தானம் செய்யவிருக்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அஸித பெரேரா நாடாளுமன்றத்தில் விடுத்த வேண்டுகோளையடுத்தே இந்த இரத்ததானம் இடம்பெற இருக்கிறது.

இந்தக் கோரிக்கையை ஐ. தே. கவும் ஏற்றுள்ளதாகவும் —

இரத்ததானம் செய்ய இது வரை நூற்றுக்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் —

அஸித பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நாளை இந்த இரத்த தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறவிருக்கிறது.

(உ-3-150)

# கிரானில் பதற்றம்!

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு கிரானில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றையடுத்து அங்கு பதற்றம் நிலவுவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கிரான் மக்கள் பெருமளவில் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர் என்றும் —

விவேகானந்த பாடசாலையின் அதிபர் திருமதி. கிருஷ்ணபிள்ளை தாக்கப்பட்டு கை முறிந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் —

அவருடைய வீடும் ஷெல் தாக்குதலால் சேதமடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிரானுக்கான போக்குவரத்தைப் படையினர் தடை செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

தற்கொலைத் தாக்குதல் நடத்திய

# பெண்ணின் உடற்பகுதி மேலதிக சோதனைக்கு!

கொழும்பு, நவ. 28

திருகோணமலை உள்துறைமுக வீதியில் கடந்த திங்களன்று இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேற்படி தற்கொலைக் குண்டுத்தாக்குதலை நடத்திய பெண்ணின் உடற்பாகங்கள் கொழும்புக்கு மேலதிக பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

கொழும்பில் இந்தப் பாகங்கள் சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனப்பொலீஸாரால் சந்தேகிக்கப்படும் இந்தத் தற்கொலைக் குண்டுதாரியான பெண் தங்கியிருந்ததாகக் கருதப்படும் — திருகோணமலையில் உள்ள — வீட்டைப் பொலீஸார் சுற்றி வளைத்த போது, அந்த வீட்டு உரிமையாளர்கள் தலைமறைவாகியுள்ளது தெரியவந்ததாம்.

இதேவேளை —

பொலீஸார் திருகோணமலைப் பகுதியில் நடத்திய தேடுதலில் சில பெண்கள் உட்பட 17 பேரைக் கைது செய்துள்ளனர்.

திருகோணமலையில் மேலும்தாக்குதல்களை நடத்துவதற்காக வெடிமருந்துகள் கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலீஸார் தமது தேடுதல் நடவடிக்கைகளை தீவிரமாக்கியுள்ளனர். (உ- 3- 150)

## மோதல்

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடிப் பகுதியில் நேற்று முன்தினம் காலையில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org